**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**SUB JUDGE**

**S.C. No. 398/ 2021**

Deposition of witness for PW4

Name : பாலு

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2026.

---

1 முதல் 6 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பேரையம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நுான் மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் எழுமலையில ˙கிராம உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது, உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் உத்தரவுப்படி நான் மற்றும் அத்திப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் கருப்பையா உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலக முதுநிலை வருவாய் அலுவலர் திருநாவுக்கரசு சேர்ந்து சீல்நாயக்கன்பட்டியில் மண் அடிப்பது சம்பந்தமாக வந்த தகவலின் அடிப்படையில் நானும், அத்திபட்டி வி.ஏ.ஓ ஒரு சக்கர வாகனத்திலும், திருநாவுக்கரசு தனி இருசக்கர வாகனத்திலும் சென்றோம். அப்போது நாகமநாயக்கன்பட்டியில் வடமேற்கே அரசு புறம்போக்கு ஓடையில் டாடா ஏசியில் மண் ஏற்றி கொண்டிருந்தார். நாங்கள் வண்டியில் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தோம். வண்டி எங்களுக்கு பாதை விடாமல் வேகமாக சென்றது. ஆல்லமநாயக்கன்பட்டி மண்ரோட்டில் வண்டி மேற்கே தரும்பி சென்றபோது நாங்கள் சென்று சுற்றி வளைத்து வண்டியை நிறுத்திவிட்டு எங்கிருந்து கொண்டு வருகிறார்கள் என்று விசாரித்தோம். அப்போது உங்களுக்கு எதற்கு தகவல் சொல்ல வேண்டும் அசிங்க அசிங்கமாக வார்த்தைகளால் பேசி வி.ஏ.ஓவின் கண்ணத்தில் அடித்து விட்டார்கள். கடப்பாரை கம்பியை ஓங்கி வீசினார்கள். அவர் விலகி கொண்டார். எங்களை தட்டி விட்டு வண்டியை எடுத்துக்கொண்டு மேற்கு பக்கமாக ஓடினார்கள். வருவாய் கோட்டாச்சியருக்கு திருநாவுக்கரசுவும், கருப்பையாவும் போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள். அவர்கள்

காவல் நிலையத்தில் புகார் அளிக்க சொன்னார்கள். வி.ஏ.ஓ. காவல் நிலையத்தில் புகார் அளித்தார். எங்களை விசாரித்தர்ாகள். நாங்கள் இடத்தை மண் மூட்டைகளை காட்டினோம்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு எழுதப்படிக்க தெரியும். எழுமலை வருவாய் கிராம் வேறு, சீல்நாயக்கன்பட்டி வருவாய் கிராமம் வேறு என்றால் சரிதான். ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியாக கிராம நிர்வாக அலுவலர், உதவியாளர் மற்றும் நிர்வாக அலுவலகம் இருக்கும் என்றால் சரிதான். மணல் திருட்டு நடைபெற்றதாக சொல்லும் இடம் சீல்நாயக்கன்பட்டி வருவாய் கிராமத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். அன்றைய தேதியில் சீல்நாயக்கபன்பட்டி கிராம நிர்வாக அலுவலர் இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. மணல் திருட்டை தடுக்க தனியாக குழு எதுவும் நியமிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் எழுமலை வி.ஏ.ஓவின் உதவியாளர் என்றால் சரிதான். நான் எனது வி.ஏ.ஓவிடம் அனுமதி வாங்கி சென்றேனா என்றால் கோட்டாட்சியர் வி.ஏ.ஓவிடம் சொல்லி வி.ஏ.ஓ எனக்கு சொன்னார். வாய் மொழி உத்தரவை நிருபிக்க முடியாது என்றால் சரிதான். வாய் மொழி உத்தரவை நிருபிக்க வருவாய் கோட்டாட்சியரை சாட்சியாக விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். போலீசாரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில் வியாபார நோக்கத்திற்காக சிமெண்ட் சாக்குகளில் சுமார் 1 யூனிட் அளவுள்ள மண் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதிப்பீடு ஆர்.டி.ஓ மணலை மதிப்பீடு செய்து வழங்குவார் என்றால் சரிதான். ஏனவே் 1 யூனிட் அளவுள்ள மணல் அந்த நேரத்தில் அளவீட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். 1 யூனிட் அளவுள்ள மணல் என்று வி.ஏ.ஓ. புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ 1 யூனிட் அளவுள்ள மணல் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஓடை பாதையானது ஒரு நான்கு சக்கர வாகனம் சென்றால் மற்றொரு வாகனம் செல்லுக் கூடிய பாதை என்றால் சரிதான். நாங்கள் வண்டியை விரட்டி மறித்து பிடித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான், வி.ஏ.ஓம் சென்ற இரு சக்கர வாகனத்தின் எண் தெரியாது. ஏங்களுடன் வந்த ஆர்.ஐ. வண்டி எண்ணும் தெரியாது. நுாங்கள் இரு சக்கர வாகனத்தில ்போகவில்லை என்பதால்தான் அதன் பதிவெண் தெரியவில்லை என்றால் சரிதான். ஏதிரிகள் தேவிடியா பயலே என்று திட்டினார்கள். ஏதிரிகள் தகாத வார்த்தைகளால் பேசவில்லை என்றாலும், புகார்தாரர் என் மேல் அதிகாரி என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முணலை

மதிப்பீடு செய்ய ஆர்.டி.ஓவிடம் 14.11.2018 அன்று எடுத்து செல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. முணல் 10 முதல் 30 சாக்குகளில் கொண்டு செல்லப்பட்டுள்ளது. புகார்தாரருக்கும் வி.ஏ.ஓ கருப்பையா சம்பவ இடத்திலிருந்து 15 கி.மீ தொலைவில் உள்ள கிராமத்தில் பணி செய்கிறார் என்றால் சரிதான். கைப்பற்றிய மூட்டைகளை அப்போது காவல ் நிலையம் கொண்டு சென்றோம். ஆந்த புகார் மேல் அதிகாரியின் அழுதத்தின் பேரில் கொடுக்கப்பட்டது என்றால ் ஆர்.டி.ஓ சொல்லி கொடுத்தோம். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆர்.டி.ஓ வாய்மொழி உத்தரவு என்பது புகார்தாரர் மற்றும் பட்டியல் 2, 3 ஆகியோரால் புனையப்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு நாங்கள் மூவரும் ஊமைக்காயம் என்பதால் மருத்துவமனைக்கு செல்லவில்லை. இந்த வழக்கானது புள்ளி விவர கணக்கிற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றாலும் புகார்தாரர் எனது மேல் அதிகாரி என்பதால், பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.16 11:58:51 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.